மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 50, திரு. ஏ.தா. பொன்னுவேலு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

50—

வரகூர் தொகுதியில் பீங்கான் தொழிற்சாலை அமைத்தல்

*35751—திரு. ஏ. தா. பொன்னுவேலு:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், ஓலைப்பாடி கிராமத்திலும் ஆலத்தூர் ஒன்றியம், காரை, தெரணி கிராமத்திலும் வெள்ளைக் களிமண் கிடைப்பதால் அவற்றைப் பயன்படுத்தி ஒரு சிறிய பீங்கான் தொழிற்சாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே,

இத்துறையைப் பொறுத்தவரை அரசிடம் செயற் குறிப்போ அல்லது திட்டமோ ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 51, திரு தா. வேடியப்பன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

51—

போளூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

*21325—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், போளூரில் பால் குளிரூட்டும் நிலையம் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயற்படுத்தப்படும்?

1995 மார்ச் 17]

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த டிசம்பர் மாதம் நடந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டததிலே போளூரிலே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்று கருத்துரு கேட்டபோது போளூர் பால் சரக சேகரிப்பு ஒன்றியத்தினுடைய மேலாண்மை இயக்குநர் அவர்கள் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய்க்கு எஸ்டிமேட் தயார் செய்து அனுப்பியிருக்கிறோம்; கூடியவிரைவில் வரும் என்று பதில் சொல்லி இருக்கிறார்கள். தயவு செய்து இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, இச்செயற்குறிப்பு தேசிய பால்வள வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரைப் பொறுத்தவரையில், அது தொழில் மையமாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டபோது போளூருக்கு சர்க்கரை ஆலை கொடுத்து பெருமை பெற்ற இன்றைய நிலையில், போளூர் தொகுதிவாழ் மக்கள் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுக்குப் பாராட்டுதலையும், நன்றிக் கடனையும் தெரிவிப்பவர்களாக இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், போளூர் தொகுதி தன்னிறைவு அடைவதற்கு சர்க்கரை ஆலை கொடுத்ததுபோல, பால் குளிரூட்டும் நிலையமும், பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனையையும், செண்பகத்தோப்பு அணையையும், ஆக நான்கு கோரிக்கைகளைத்தான் விடுத்திருக்கிறோம். அதிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு சர்க்கரை ஆலையைக் கொடுத்து இருக்கிறார்கள். அடுத்த கட்டமாக போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் வந்தவாசி மற்றும் செய்யாறு அரசு விழா நிகழ்ச்சியில்

பேசும்போது போளூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கப்படும் என்ற உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே போளூர் மைய பகுதி என்ற அடிப்படையிலே, வட ஆற்காடு, அம்பேத்தார் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களில் இரண்டிலும் அதிகப்படியாக போளூரில் 70,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது என்ற காரணத்தினாலும், அதிகமான பால் உற்பத்தியாளர்கள் பால் உற்பத்தியின் சங்கத்தை இயக்கி உள்ள ஒன்றியம் என்ற அடிப்படையிலேயும் அதை மறுபரிசீலனை செய்து போளூரிலே பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணங்களுக்கு மதிப்பளித்து, இது குறித்து மறு ஆய்வு செய்யப்படும். மறு ஆய்வு முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 52, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

52—

சேலம் அரசினர் விழியிழந்தோர் பள்ளிக்கு வசதிகள் அளித்தல்

*22296—**திரு. கே. கந்தசாமி :**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசினர் விழியிழந்தோர் பள்ளியில் அடிப்படை வசதிகள் இல்லாமலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவ்வசதிகள் செய்ய எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அடிப்படை வசதியுடன் மிக நல்ல முறையிலே இயங்கி வருகிறது. ஆகவே இவ்வினாவிற்கு இடமில்லை.